ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1917/51 - 2015 ජූනි මස 05 වැනි සිකුරාදා - 2015.06.05
*1917/51 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறப்பெய்தியமை காரணமாக, நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

தம்பிமுத்து துரைமணி என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர்குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் குறிப்பிட்ட காலத்தில் தனது முடிவைத் தெரிவிக்காததாலும்;

இப்போது நல்லூர் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் டெனிசியஸ் கனியூட் அரவிந்தராஜ் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி நல்லூர் பிரதேச சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி உறுப்பினருக்கு அடுத்ததாக அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள திருமதி அமிர்தநாதன் நிரஞ்சனாதேவி என்பவர், அவ்வெற்றிடம் ஏற்பட்ட நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டெ. க. அரவிந்தராஜ்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
நல்லூர் பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2015, யூன் 03.

*6- 585*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.